## நவம்பர் – 11 – பொதுக்கால 32ம் ஞாயிறு

**"அவரே என்கேடயம், எனக்கு மீட்பளிக்கும் வல்லமை, என் அரண்"–திபா 18:2**

**முதல் வாசகம் : 1 அரசர் 17 : 10 – 16**

அக்காலத்தில், எலியா புறப்பட்டு, சாரிபாத்துக்குப் போனார். நகரின் நுழைவாயிலை வந்தடைந்தபொழுது, அங்கே ஒரு கைம்பெண் சுள்ளிகளைப் பொறுக்கிக் கொண்டிருந்தார். அவர் அவரை அழைத்து, "ஒரு பாத்திரத்தில் எனக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா" என்றார்.அவர் அதைக்கொண்டு வரச் செல்கையில், அவரைக் கூப்பிட்டு, "எனக்குக் கொஞ்சம் அப்பமும் கையோடு கொண்டு வருவாயா?" என்றார்.அவர், "வாழும் உம் கடவுளாகிய ஆண்டவர்மேல் ஆணை! என்னிடம் அப்பம் ஏதும் இல்லை. பானையில் கையளவு மாவும் கலயத்தில் சிறிதளவு எண்ணெயுமே என்னிடம் உள்ளன. இதோ, இப்போது இரண்டொரு சுள்ளிகளைப் பொறுக்கிக்கொண்டு வீட்டிற்குப்போய் அப்பம் சுட்டு, நானும் என்மகனும் சாப்பிடுவோம். அதன் பின் சாகத்தான் வேண்டும்" என்றார்.எலியா அவரிடம், "அஞ்சவேண்டாம், போய் நீ சொன்னபடியேசெய். ஆனால், முதலில் எனக்கு ஒரு சிறிய அப்பம் சுட்டுக் கொண்டுவா. பிறகு உனக்கும் உன்மகனுக்கும் சுட்டுக்கொள். இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவர் உரைப்பது இதுவே. நாட்டில் ஆண்டவர் மழை பெய்யச்செய்யும் நாள் வரை பானையிலுள்ள மாவு தீராது. கலயத்திலுள்ள எண்ணெயும் குறையாது" என்றுசொன்னார்.அவர் போய் எலியா சொன்னபடியே செய்தார். அவரும் அவருடைய மகனும், அவர் வீட்டாரும் பல நாள் சாப்பிட்டனர்.எலியா வழியாக ஆண்டவர் உரைத்த வாக்கின்படி பானையிலிருந்து மாவு தீரவில்லை. கலயத்திலிருந்த எண்ணெயும் குறையவில்லை.

**பதில்பாடல் :** என் நெஞ்சே நீ ஆண்டவரைப் போற்றிடு

**இரண்டாம் வாசகம் : எபிரேயர் 9 : 24 – 28**

சகோதர சகோதரிகளே! கிறிஸ்து மனிதரின் கையால் அமைக்கப்பட்டதும் உண்மையான தூயகத்திற்கு முன்னடையாளமாய் இருப்பதுமான இவ்வுலகத் தூயகத்திற்குள் நுழையாமல் விண்ணுலகிற்குள்ளேயே நுழைந்திருக்கிறார். அங்கே இப்போது நம் சார்பாகக் கடவுளின் திருமுன் நிற்கிறார். தலைமைக்குரு விலங்குகளின் இரத்தத்துடன் ஆண்டுதோறும் தூயகத்திற்குள் செல்வார். அதற்கு மாறாக, கிறிஸ்து தம்மையே ஒரே முறை பலியாகக் கொடுத்தார். அதை மீண்டும் மீண்டும் செய்யவில்லை. அவ்வாறு செய்திருப்பாரென்றால், உலகம் தோன்றிய காலந்தொட்டு, அவர் மீண்டும் மீண்டும் துன்புற்றிருக்க வேண்டும். அதற்கு மாறாக, உலகம் முடியும் காலமான இப்போது தம்மையே பலியாகக் கொடுத்து, பாவங்களைப் போக்குவதற்காக ஒரேமுறை உலகில் வெளிப்படுத்தப்பட்டார். மனிதர் ஒரேமுறை சாவுக்கு உட்படுகின்றனர். பின்னர் இறுதித்தீர்ப்பு வருகிறது. இதுவே அவர்களுக்கெனவுள்ள நியதி. அவ்வாறே, கிறிஸ்துவும் பலரின் பாவங்களைப் போக்கும் பொருட்டு, ஒரேமுறை தம்மைத்தாமே பலியாகக் கொடுத்தார். அவர் மீண்டும் ஒருமுறை தோன்றுவார். ஆனால், பாவத்தின் பொருட்டு அல்ல, தமக்காகக் காத்திருப் பவர்களுக்கு மீட்பு அருளும் பொருட்டே தோன்றுவார்

**நற்செய்தி : மாற்கு 12 : 38 - 44**

அக்காலத்தில் இயேசு கற்பித்துக் கொண்டிருந்த போது, "மறைநூல் அறிஞர்களைக் குறித்துக் கவனமாய் இருங்கள். அவர்கள் தொங்கல் ஆடை அணிந்து நடமாடுவதையும் சந்தை வெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் விரும்புகிறார்கள். தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விருந்துகளில் முதன்மையான இடங்களையும் பெற விரும்புகிறார்கள். கைம்பெண்களின் வீடுகளைப் பிடுங்கிக்கொள்கிறார்கள் கடுந்தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகவிருப்பவர்கள் இவர்களே" என்று கூறினார்.இயேசு காணிக்கைப் பெட்டிக்கு எதிராக அமர்ந்து கொண்டு மக்கள் அதில் செப்புக்காசு போடுவதை உற்றுநோக்கிக் கொண்டிருந்தார். செல்வர் பலர் அதில் மிகுதியாகப் போட்டனர்.அங்கு வந்த ஓர் ஏழைக் கைம்பெண் ஒரு கொதிராந்துக்கு இணையான இரண்டு காசுகளைப் போட்டார். அப்பொழுது, அவர் தம் சீடரை வரவழைத்து, "இந்த ஏழைக் கைம்பெண், காணிக்கைப் பெட்டியில் காசுபோட்ட மற்ற எல்லாரையும் விட மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர். இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம் இருந்த அனைத்தையுமே, ஏன் தம் பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே போட்டுவிட்டார்" என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** கத்தோலிக்க விசுவாசம் என்பது அனுதினமும் திருப்பலியில் பங்கெடுத்து திவ்விய நற்கருணைப் பந்தியில் அமர்வதனாலோ, வாரந்தோறும் புனிதர்களுக்கு நவநாட்கள் செய்வதனாலோ, அனுதினமும் நற்செய்தியை வாசித்து தியானிப்பதனாலோ, தவறாது செபமாலை செபிப்பதனாலோ, அருட்பணிச் சபைகளின் செபிக்கும் ஊழியர்களாக வாழ்வதனாலோ நிறைவடைவதில்லை. மாறாக, இவை அனைத்தோடு "உன் மீது நீ அன்பு கூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக" (மாற்கு12:31)என்ற இறைவார்த்தையை வாழ்ந்து காட்டுவதாகும். பிறரில் அக்கறை என்பது அடுத்தவர்களது கஸ்டதுன்பங்களில் பங்கேற்பதனையே "எரிபலிகளையும், வேறுபலிகளையும் விடமேலானது" (மாற்கு12:33) என்று இறைமகன் இயேசு குறிப்பிடுகின்றார். "ஏழைகளின் மகிழ்வில் நான் இறைவனைக் காண்கின்றேன்" என்று கூறி இந்திய உபகண்டத்தின் கல்கத்தாச் சேரியில் வாழ்ந்த அன்னை தெரேசாவின் வழியை, அல்லது கடந்த 1700களில் பிரான்ஸ் நாட்டில் டினான் **(Dinan)** நகரத்து வீதிகளில் இறந்து கொண்டிருந்த தொழுநோயாளிகளை "கிறிஸ்துவின் மறு உருவமைப்புக்கள் "எனத் தேடிச்சென்ற புனிதர் லூயிஸ் டீ மொன்போட் **(St. Louis De Monfort)** என்பவரது வாழ்க்கைப் பாதையை எமது முன்மாதிரியாகக் கொள்வோம். எமது இறைவன் அன்பு மயமானவராயின், தமதுசாயலிலும், பாவனையிலும் எம்மைப் படைத்த இறைவனது சாயலாகப் படைக்கப்பட்ட எமது சகோதரரும் அன்பு மயமானவரல்லவா?. எதற்காக இந்த உண்மையை நாம் ஏற்கமறுத்து இனம், ஊர், சுற்றம், சொந்தம், தெரிந்தவர், நன்பர் என்றெல்லாம் குழுமங்கள் அமைத்து கத்தோலிக்க சகோதரர்களைக் கூறுபோட்டு, நாம் வெறுப்பவர்களை மட்டந்தட்டி ஓரங்கட்டி ஒதுக்குகின்றோம்?. ஆண்டவர் இயேசுவிற்கு வெறுப்பான செயலை நாம் முன்னின்று செயற்படுத்தி எம்மைக் கிறிஸ்துவைப் பின்பற்றும் கத்தோலிக்கர் என எவ்வாறு பெருமையோடு அழைக்கலாம்?. எனவே, ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பாவனையும் சாயலுமாகப் படைக்கப்பட்ட எமது சகோதரனில் நாம் அன்புகொண்டு வாழ்கின்றோமா? என ஒருகணம் எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம்.